KVB Karur Vysya Bank
Smart way to bank

# THE KARUR VYSYA BANK LIMITED

Regd. & Central Office, No. 20, Erode Road, Vadivel Nagar, L.N.S., Karur - 639002.
**CIN No: L65110TN1916PLC001295**
e-Mail:kvb_sig@kvbmail.com Website: www.kvb.co.in
Tel No: 04324-269441 Fax No: 04324-225700

# அறிவிப்பு

நிகழும் 2019-ம் வருடம் ஜூலை மாதம் 18ம் தேதி வியாழக்கிழமை காலை 09.30 மணிக்கு, கரூர் வைஸ்யா வங்கியின் 100-வது வருடாந்திர மகாசபை கூட்டம், இலக்கம் 20, ஈரோடு சாலை, வடிவேல் நகர், எல்.என்.எஸ் கரூர் 639 002ல் அமைந்துள்ள வங்கியின் பதிவு அலுவலகத்தில் நடைபெறும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேலும் இந்திய நிறுமங்கள் சட்டம் 2013, பிரிவு 91 மற்றும் அதன் கீழ் வகுக்கப்பட்ட விதிகளின்படியும், இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள், 2015 (SEBI LODR 2015)ன் 42-வது கட்டுப்பாட்டின் படியும், வங்கியின் மகாசபை கூட்டத்தில் சம உரிமை பங்குகளுக்கான பங்காதாயம் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில், பங்காதாயத்தை பெறுவதற்கு தகுதியுள்ள உறுப்பினர்களை அடையாளம் காணும் பொருட்டு, வங்கியின் உறுப்பினர் பதிவேடும் மற்றும் பங்கு மாற்று புத்தகங்களும் 2019ம் வருடம் ஜூலை மாதம் 12ம் தேதி (வெள்ளிக்கிழமை) முதல் 18ம் தேதி (வியாழக்கிழமை) வரை மூடப்பட்டிருக்கும் எனவும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்திய நிறுமங்கள் சட்டம் 2013, பிரிவு 101 மற்றும் நிறுமங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, பிரிவு 18ன் படியும், இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள், 2015 (SEBI LODR 2015)ன் 36வது கட்டுப்பாடு மற்றும் அதன்பின்பு ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் இருப்பின் அதன்படியும் மின்னஞ்சல் முகவரியினை முதலீட்டு பங்கேற்பாளரிடமோ (DP), வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரிடமோ (RTA) அல்லது வங்கியிடமோ பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மகாசபை கூட்டத்திற்கான அறிவிப்பும், 2018-19ம் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. மின்னஞ்சல் முகவரியினை பதிவு செய்யாதவர்களுக்கும், வங்கியின் ஆண்டறிக்கையை புத்தக வடிவில் கோரியவர்களுக்கும் 2018-19ம் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் 100 வது மகாசபை கூட்டத்திற்கான அறிவிப்பு ஆகியவை உறுப்பினர்களின் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்திய நிறுமங்கள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் நிறுமங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2015, பிரிவு 20ன் படியும், இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள், 2015 (SEBI LODR 2015)ன் 44வது கட்டுப்பாட்டின் படியும், மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீது தொலைதூர மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியினை, தேசிய பங்குகள் வைப்பு நிறுவனத்தின் (NSDL) வாயிலாக வங்கி ஏற்பாடு செய்துள்ளது. இந்த வசதியினை பயன்படுத்தி மகாசபை கூட்ட அறிவிப்பில் உள்ள ஏதேனும் ஒருசில தீர்மானங்களுக்கோ அல்லது அனைத்து தீர்மானங்களுக்குமோ வங்கியின் உறுப்பினர் பதிவேட்டில் 11.07.2019ம் நாளன்று, அலுவல் நேர முடிவில், பட்டியலில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் வாக்களிக்கலாம். தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையானது பின்வரும் கால அட்டவணைப்படி நடைபெறும்:

| | | |
|---|---|---|
| தொலைதூர மின்னணு வாக்களிப்பு | **தொடங்கும் நாள் மற்றும் நேரம்** | **13.07.2019 காலை 10.00 மணி** |
| | **முடியும் நாள் மற்றும் நேரம்** | **17.07.2019 மாலை 05.00 மணி** |

தொலைதூர மின்னணு வாக்களிக்கும் முறையினை பயன்படுத்தி வாக்களிக்க இயலாதவர்கள் அஞ்சல் வாக்கு சீட்டு மூலமாக வாக்களிக்கலாம். தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை, அஞ்சல் வாக்கு சீட்டு முறை ஆகிய இரண்டு முறைகளிலும் வாக்களிக்காதவர்கள் மகாசபை கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்கலாம்.

**வங்கி உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு:**

1. தேசிய பங்குகள் வைப்பு நிறுவனத்தின் (NSDL) வாயிலாக நடைபெறும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையானது 17.07.2019 அன்று மாலை 5.00 மணியளவில் நிறைவு பெறும். தீர்மானத்தின் மீது ஒருமுறை செலுத்தப்படும் வாக்கு மீண்டும் மாற்றதக்கதல்ல.
2. சுய விலாசமிட்ட முன்செலுத்திய அஞ்சல் உறையை பயன்படுத்தி அஞ்சல் வாக்கு சீட்டு முறையில் வாக்களிக்கும் உறுப்பினர்களது வாக்குகள் 17.07.2019 அன்று மாலை 5.00 மணிக்கு முன்பாக பரிசீலனை அதிகாரியின் விலாசத்திற்கு சென்றடைய வேண்டும். அதன் பின்பு பெறப்படும் வாக்குகள் அனைத்தும் செல்லாத வாக்குகளாக கருதப்படும்.
3. தொலைதூர மின்னணு வாக்களிக்கும் முறை அல்லது அஞ்சல் வாக்கு சீட்டு முறை ஆகியவற்றில் ஏதேனும் ஒரு முறையை மட்டுமே பயன்படுத்தி வாக்களிக்கலாம். ஒருவேளை, ஒரு உறுப்பினர் இரண்டு வழிமுறைகளையும் பயன்படுத்தி வாக்களித்திருப்பாரேயானால், தொலைதூர மின்னணு வாக்கினை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு அஞ்சல் வாக்கு சீட்டு மூலமாக செலுத்தப்பட்ட வாக்கு நிராகரிக்கப்படும்.
4. தொலைதூர மின்னணு வாக்களிக்கும் முறையிலோ, அஞ்சல் / வாக்கு சீட்டு முறையிலோ தங்களது வாக்கினை செலுத்திய உறுப்பினர்களும், மகாசபை கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால் மகாசபை கூட்ட நாளன்று நடைபெறும் மின்னணு முறையிலான வாக்கெடுப்பில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். அதாவது, தொலைதூர மின்னணு வாக்களிக்கும் முறையிலோ, அஞ்சல் வாக்கு சீட்டு முறையிலோ தங்களது வாக்கினை செலுத்தாத உறுப்பினர்கள் மட்டுமே மகாசபை கூட்ட நாளன்று நடைபெறும் மின்னணு முறையிலான வாக்கெடுப்பில் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள். மகாசபை கூட்ட நாளன்று நடைபெறும் மின்னணு முறையிலான வாக்கெடுப்பு, தொழில்நுட்ப கோளாறு காரணமாகவோ அல்லது வேறு ஏதாவது காரணத்தாலோ தடைபட நேரிடும் பட்சத்தில், வாக்கு சீட்டு முறையில் உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளை செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.
5. மகாசபை கூட்ட அறிவிப்பு அனுப்பபட்ட நாளுக்கும் 11.07.2019ம் நாளன்று (cutoff date) அலுவல் நேர முடிவுக்கும் இடையில் வங்கியின் பங்குகளை வாங்கியதன் மூலமாக உறுப்பினரானவர்கள், தொலைதூர மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான பயனர் பெயரையும் (Login ID), கடவுச்சொல்லையும் (Password), kvb_sig@kvbmail.com அல்லது info@skdc-consultants.com அல்லது evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பித்து பெற்று கொள்ளலாம். 11.07.2019ம் நாளன்று (cutoff date) வங்கியின் உறுப்பினராக இல்லாதவர்களுக்கு இந்த அறிவிப்பு ஒரு தகவலுக்காக மட்டுமே.
6. மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பு நடைமுறையானது வெளிப்படைத்தன்மையுடனும் உண்மையாகவும் நடப்பதற்கு ஏதுவாக திரு. சோலையப்பன், தொழில்முறை நிறுமச் செயலாளர் (Practising Company Secretary), சேலம் அவர்களை பரிசீலனை அதிகாரியாக வங்கியின் இயக்குநரவை நியமித்துள்ளது.
7. பங்காதாயம் தொடர்பான தீர்மானம் மகாசபை கூட்டத்தில் ஒப்புதல் பெறப்படும் பட்சத்தில், 11.07.2019ம் தேதியின் அலுவல் நேர முடிவில் வங்கியின் உறுப்பினர் பதிவேட்டின்படி பட்டியலில் உள்ள உறுப்பினர்களுக்கு 19.07.2019 தேதியிலிருந்து 25.07.2019 தேதிக்குள்ளாக பங்காதாயம் அளிக்கப்படும்.
8. தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை தொடர்பான சந்தேகங்கள் மற்றும் குறைகள் ஏதேனும் இருப்பின் உறுப்பினர்கள், திரு. விஸ்வா சாய் யக்காளி, மேலாளர், கரூர் வைஸ்யா வங்கி, முதலீட்டாளர்கள் தொடர்பு பிரிவு (Investor Relations Cell), இலக்கம் 20, ஈரோடு சாலை, வடிவேல் நகர், எல்.என்.எஸ்., கரூர் 639 002 (தொலைபேசி எண்: 04324-269431: மின்னஞ்சல்: kvb_sig@kvbmail.com) அவர்களையும் அல்லது திரு. ஜெய குமார். K, மேலாளர், எஸ்கேடிசி கன்சல்டண்ட்ஸ், பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர், (அலகு: கரூர் வைஸ்யா வங்கி) 1391/A1, 3வது தளம், கணபதி டவர்ஸ், சத்தியமங்கலம் சாலை, கணபதி, கோயமுத்தூர் - 641 006 (தொலைபேசி எண்: 0422-4958995 / 2539835, 836: மின்னஞ்சல்: info@skdc-consultants.com அவர்களையும் தொடர்பு கொள்ளலாம்.
9. தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் அஞ்சல் சீட்டு வாக்களிப்பு தொடர்பான மேலதிக விளக்கங்களை பெறவும் மற்றும் குறைகள் ஏதேனும் இருப்பின் தெரிவிக்கவும். அணுக வேண்டிய முகவரி: Ms. Pallavi Mhatre (Manager), NSDL, 4th Floor, 'A' Wing, Trade World, Kamala Mills Compound, Senapati Bapat Marg, Lower Parel, Mumbai – 400 013., தொலைபேசி: 1800 222 990 / 022-24994200 / 24994545 மின்னஞ்சல்: evoting@nsdl.co.in.
10. வங்கியின் 100வது மகாசபை கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கை ஆகியவற்றை வங்கியின் இணையதளமான www.kvb.co.in பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் வங்கியின் பதிவு அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் இந்த ஆவணங்களை வங்கியின் அலுவல் நேரத்தில் உறுப்பினர்கள் ஆய்வு செய்து கொள்ளலாம்.

**ஸ்ரீனிவாசராவ் M**
நிறுமச் செயலாளர்
தி கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

இடம் : கரூர்
தேதி : 25.06.2019